# யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலகம்

## இரண்டாம் தவணைப் பரீட்சை – 2019

| தரம் : 06 | செயன்முறைத் தொழினுட்பத்திறன்கள்<br>சுட்டெண் : ........................................................ | நேரம் :<br>2.00 மணித்தியாலம் |
|---|---|---|


### பகுதி - I

**மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

01. அலங்கார இலைத் தாவரமாகக் காணப்படுவது
   1) மல்லிகை  2) சீனியாஸ்
   3) சேம்பு  4) போகன்விலா

02. பின்வருவனவற்றுள் குட்டையான தாவரத்திற்கு உதாரணமாக அமைவது
   1) இக்ஸோரா  2) சைபிரஸ்
   3) ஸ்பைடர் பிளான்ட்  4) அலமெந்தா

03. ஒழுங்கமைக்கப்பட்ட சமையல் அறை ஒன்றின் இயல்பு அல்லாதது
   1) வெளிச்சம், காற்றோட்டம் நன்கு இருக்கும்.
   2) கழிவுநீர் செல்லும் வசதி அற்றதாக இருத்தல்.
   3) தீங்கு செய்யும் உயிரினங்களின் நடமாட்டம் காணப்படாது.
   4) வேலை அலகுகள் வேறாக்கப்பட்டிருக்கும்.

04.  உருவில் காணப்படும் சமையலறைக் குறியீடு எதனைக் குறிக்கின்றது?
   1) சமையலறைக் கதவு  2) சமையலறைச் சுவர்
   3) சமையலறை யன்னல்  4) உணவு சமைக்கும் அலகு

05. சுட்டுத் துண்டொன்றைத் தயார் செய்யும் முறைகளாவன
   1) நிறப் பேனைகளால் கையால் வரைதல்.
   2) பொருத்தமான படங்களை ஒட்டுதல்.
   3) அச்சிடப்பட்ட படங்களை ஒட்டுதல்.
   4) மேற்கூறிய யாவும் சரி.

kalvi.lk

09. திட்டமிட்டபடி அமைக்கப்பட்ட சமையலறையில் வேலை செய்யும் போது ஏற்படும் நன்மை யல்லாதது
1) வேலை செய்வது கடினமானது.
2) நேரம் மீதப்படுத்தப்படும்.
3) அதிக சிரமம் ஏற்படாது.
4) குடும்பத்தவர்களின் ஆரோக்கியம் பேணப்படும்.

10. மண்ணைத் தூர்வையாக்கும் பிராணியல்லாதது
1) மண்புழு
2) செண்பகம்
3) பிள்ளைப்பூச்சி
4) உழுவான்

11. பின்வருவனவற்றுள் உயிருள்ள மூடுபடையாக அமைவது
1) வல்லாரை
2) மரத்தூசி
3) வைக்கோல்
4) தென்னோலை

12. அவித்த அரிசியில் காணப்படும் போசணைக்கூறு
1) $B_2$
2) $B_1$
3) A
4) C

13. அதிக இட வசதியுள்ள சமையலறை
1) L வடிவ சமையலறை
2) I வடிவ சமையலறை
3) U வடிவ சமையலறை
4) W வடிவ சமையலறை

14. நேரடியாக பாத்திகளில் வித்துக்களாக நடக் கூடிய பயிர்கள்
1) கத்தரி, மிளகாய்
2) பயற்றை, முள்ளங்கி
3) கங்குன், கோவா
4) மஞ்சள், தக்காளி



15. சாடிகளின் அடியில் துளையிடப்படுவதன் நோக்கம்
1) மேலதிக நீர் வெளியேறுவுதற்கு
2) வேர் வெளித் தெரிவதற்கு
3) வளி உட்புகுவதற்கு
4) மண் வெளியேறுவதற்கு

16. புதிய நாற்றுச் சாடிக்கு தாவரமொன்றை மாற்றும் படிமுறை,
1) ஊடகத்தை தயாரித்தல்.
2) தாவரத்தை பிடுங்குதல்
3) தாவர வேர்களை துப்பரவாக்கல்.
4) மேற்கூறிய யாவும் சரி.

17. கல்சியம் போன்ற போசணைகளை பெருமளவில் கொண்டுள்ள மீன்களல்லாதவை
1) சாளை, கீரி
2) நெய்த்தோலி, கீரி
3) நெய்த்தோலி, சாளை
4) சுறா, திருக்கை

18. பின்வருவனவற்றில் பால் உற்பத்திப் பொருளாக விளங்குவது
1) ஜாம்
2) தயிர்
3) பழப்பாகு
4) சட்னி

19. முறைசாரா வடிவத்திற்கு உதாரணமாக அமைவது

1) 
2) 
3) 
4) 

20. பின்வருவனவற்றுள் அடிப்படைத் தையலாக காணப்படுவது
1) கம்பளித் தையல்
2) சிறு நூலோடி
3) சோம் தையல்
4) மீன் முள்ளுத் தையல்

( 20 × 1 = 20 புள்ளிகள்)


kalvi.lk

## பகுதி - II

**முதலாம் வினா கட்டாயமானதாகும். ஏனைய வினாக்களில் இரண்டினைத் தெரிவு செய்து மொத்தம் மூன்று வினாக்களுக்கு விடை தருக.**

**01.** 1) உமது பாடசாலையில் செயன்முறைத் தொழினுட்பத்திறன்கள் பாடத்தில் உம்மால் செய்யப்பட்ட செயற்பாடு ஒன்றினைக் குறிப்பிடுக.

2) இச் செயற்பாட்டிற்குப் பயன்படுத்திய பொருட்கள், கருவிகளைப் பட்டியற்படுத்துக.

3) இச் செயற்பாட்டின் மூலம் நீர் பெற்றுக் கொண்ட அனுபவம் ஒன்றினைக் குறிப்பிடுக.

4) இச்செயற்பாட்டிற்கு உமக்கு உதவியோரைக் குறிப்பிடுக.

5) செயற்பாட்டினை மேற்கொள்ளும் போது நீர் இடர்ப்பட்ட விடயம் ஒன்றினைக் குறிப்பிடுக.

(5 × 2 = 10 புள்ளிகள்)

**02.** 1) அலங்காரத் தாவரங்கள் மூலம் சூழலுக்குக் கிடைக்கும் பயன்கள் இரண்டு தருக.

2) தாவரம் ஒன்றின் சிறப்பான வளர்ச்சிக்குத் தேவையான காரணிகள் எவையெனக் குறிப்பிடுக.

3) கன்றுகளை நாற்றுச் சாடிகளில் நடுவதற்குப் பயன்படுத்தப்படும் நடுகை ஊடகங்கள் எவை யெனக் குறிப்பிடுக.

4) வீட்டுத் தோட்டத்தில் தாவரங்களை வளர்த்தல் மூலம் கிடைக்கும் பயன்கள் மூன்றினைக் குறிப்பிடுக.

5) பூச்சிகளை விரட்டும் தாவரங்கள் இரண்டின் பெயர்களினை எழுதுக.

(5 × 2 = 10 புள்ளிகள்)

**03.** 1) சமூகம் ஒன்றின் ஒழுங்கமைக்கப்பட்ட மிகச் சிறிய அலகு எதுவென்பதனைக் குறிப்பிடுக.

2) சேமிப்புப் பழக்கத்தினால் கிடைக்கும் அனுகூலங்கள் இரண்டு குறிப்பிடுக.

3) வீடுகளில் வளங்களை வீணடிக்காது சேமிக்கும் பழக்கவழக்கங்கள் மூன்றினைத் தருக.

4) பணத்தினைச் சேமிப்புச் செய்வதற்குப் பொருத்தமான நிதி நிறுவனங்கள் இரண்டு தருக.

5) பொருளொன்றைக் கொள்வனவு செய்யும் போது கவனிக்க வேண்டிய விடயங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.


(5 × 2 = 10 புள்ளிகள்)

**04.** 1) முறையாக ஒழுங்கமைக்கப்பட்ட சமையலறையின் பண்புகள் மூன்றினைத் தருக.

2) சமையலறையொன்றில் காணப்படும் பிரதான வேலை அலகுகளைக் குறிப்பிடுக.

3) பின்வரும் சமையலறைக் குறியீடுகள் குறிப்பவற்றை எழுதிக் காட்டுக.

1) 

2) 


3) 


4) சுட்டுத் துண்டொன்றில் அடங்கும் விடயங்கள் நான்கு குறிப்பிடுக.

5) பரிசுப் பொதியொன்றினை அமைப்பதற்குத் தேவையான பொருட்கள் நான்கினைக் குறிப்பிடுக.

(5 × 2 = 10 புள்ளிகள்)



kalvi.lk

Education
கல்வி
අධ්‍යාපන

தரம் 01 - 10

# 3ம் தவணை

**REVISION | PAPER DISCUSSION**

புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன..

**ஆரம்பம் - 01.12.2024**

மீட்டல் மற்றும் வினாத்தாள் கலந்துரையாடல் வகுப்புகள்

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் இணைந்து கொள்ள முடியும்.

JOIN NOW

**கட்டண விபரங்கள்**

தமிழ் Medium

| | |
|---|---|
| தரம் 01-02 | 2000/= |
| தரம் 03-05 | 2500/= |
| தரம் 06-10 | 3000/= |

English Medium

| | |
|---|---|
| தரம் 06-07 | 3500/= |

Education கல்வி අධ්‍යාපන

KALVI.LK

WHATSAPP

075 287 1457